International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஔவையாரின் பாடல்களில் பெண் உரிமைகள் குறுந்தொகையை முன்வைத்து

**கு. சித்ராதேவி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கற்பகம் உயர்கல்விக்கழகம்
கோயம்புத்தூர்

**ஆய்வுச் சுருக்கம்**

சமூக இயக்கம் பெண்ணை மையமிட்டு இயக்கம் கொண்டுள்ளது. சமுதாயத்தின் வாழ்விற்கும் நிலைபேற்றிற்கும் பெண்களின் உரிமைகளும், இயங்குநிலையும் மிக இன்றியமையாதவையாக இருக்கின்றன. பெண்ணின் உணர்வுளை மறுதலிக்கும் சமூகம் வளர்ச்சியற்ற சமூகமாகவே காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் இயக்கம் பெற்றிருந்த தன்மையை பெண் படைப்பாளர்கள் மிக நுண்ணிய மொழியாடல்களில் பதிவு செய்துள்ளனர். அத்தகையதொரு பெண் ஆளுமையாக ஔவையாரின் கவிதை மொழி அமைந்துள்ளது. தனக்கான உரிமைகளை உரத்தும், ஆழமாகவும் அவரின் மொழிகின்ற தன்மையை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**முதன்மைச் சொற்கள்**

மனித உரிமைகள், பெண்ணுரிமை, அறத்தொடு நிற்றல், வாயாகின்று

## முன்னுரை

இலக்கியம் இரசனைக்குரிய பண்பிலிருந்து மக்களுக்கான பயன் ன்னும் நிலையினை எய்தும்போதே அவ்விலக்கியம் நிலைபேறுடையதாக அமையும். அவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் பழம்பெருமையினை உடையதான சங்க இலக்கியம் வாழ்க்கைக்கான நெறிகளை, மனித நேயத்தை உணர்த்தும் அற்புத இலக்கியங்களாகக் காணப்படுகின்றன. சங்கப் பாடல்களில் அகம் பேசும் தன்மையுடையதாக அமையும் குறுந்தொகை அகம் சார்ந்த கூறுகளை மட்டும் கூறிச்செல்லாமல் மனித வாழ்க்கையின் பயனை, மனிதன் வாழவேண்டிய நெறியினை, உலகத்தோடு மனிதன் கொண்டிருக்கின்ற உறவினை உணர்த்தும் வகையிலும் அமைந்துள்ளது. ஒரு உயிரி பிற உயிரியோடு கொண்டிருக்க வேண்டிய அன்பினையும், கருணையையும் அடிப்படை நாதமாகக் கொண்டே குறுந்தொகைப் பாடலில் அகக்கூறுகள் பேசப்படுகின்றது.

## அடிப்படை மனித உரிமைகள்

உரிமை என்பது ஒருவர் கொடுக்க மற்றவர் பெறும் நிலையில் இல்லாமல் இருக்கும் நிலையினையே குறிக்கும். மனிதனாக வாழும் ஒவ்வொருவருக்கும் சில வரையறுக்கப்பட்ட உரிமைகள் அடிப்படையாகக் காணப்படுகின்றன. இவ்வுரிமைகளில் உணவு, உடை,

உறையுள் என்பவை மனிதனுக்கு அடிப்படைத் தேவையாகக் காணப்படுபவை. இத்தகைய ஒரு பொருண்மையில் சங்க இலக்கியங்களில் காணப்படும் மனித உரிமைகளை ஆராய இயலும். எனினும், இக்கட்டுரையில் ஒரு மனிதன் தான் வாழும் நாட்களில் தனக்கேற்பட்ட அனுபவத்தையும், உணர்வுகளையும் வெளிப் படுத்த கிடைக்கக்கூடிய சுதந்திரம் அல்லது உரிமைகள் என்பவை மிக முக்கியமான தாகத் தோற்றம் கொள்கின்றன.

கருத்துக்களையும், எண்ணங்களையும் வெளிப்படுத்த உரிமையில்லையெனில் தான் கற்றுக்கொண்ட வாழ்க்கைக்கல்வியின் பயன் பயனற்றதாகப் போய்விடுகின்றது. அவ்வகையில் குறுந்தொகைப் பாடல்களில் பெண்பாற் புலவர்கள் வெளிப்படுத்தும் பெண்ணுரிமைகளையும், அவர்களின் உணர்வு வெளிப் பாட்டினையும் ஆய்த்து கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது. இதன் வாயிலாக அன்றைய காலகட்டத்தில் பெண்ணுக்கிருந்த உரிமைகள், அவர்கள் சமூகக் கட்டமைப்பினால் உணர்வுகள் ஒடுக்கப்பட்டிருந்த நிலை போன்றவற்றை அறிந்துகொள்ள இயலும்.

**குறுந்தொகையில் பெண்பாற் புலவர்களின் சொல்லாடல்கள்**

மனிதகுல வரலாற்றில் மீட்டெடுப்புக்களுக்கான சிந்தனை சமூக எழுச்சிக்கான தூண்டுதலாக சங்கப்பெண்பாற் புலவர்களின் எழுத்துக்கள் அமைந்துள்ளன. அடிப்படை உணர்வுகளாக நிகழ்த்தும் தாக்குதலின் காரணமாகவும், இத்தகைய நிகழ்வின் மீது வரையறுக்கப்பட்ட உணர்வுகளின் மீது ஆண், பெண் என்ற பேதம் 'கொண்ட வெறுப்புக்களில் வெளிப்படும் உணர்வு வெளிப்பாடும். தங்களுடைய அடையாளம் தொலைத்தலுக்கான காரணங்களாகின்றன. பண்பாட்டு அடையாளத்துக்கும், பொருளாதார, சமூக பண்பாட்டு அதிகாரங்களுக்கும் இடையில் நிழுகின்ற போராட்டமும் அவர்களின் சொல்லாடல்களில் பிரதிபலிப்பதை அறியமுடிகின்றது.

குறுந்தொகைப் பாடல்களில் பெண் எழுத்துக்களில் ஆளுமை செலுத்தியவர்களாக வெள்ளிவீதியார், ஆதிமந்தியார், ஔவையார் போன்றோர்களின் பாடல்கள் அமைந்து உள்ளன. பெண்பாற்புலவர்களின் பாடல்களாகக் குறுந்தொகையில் 46 பாடல்கள் அமைந்து உள்ளன. இவர்களின் பாடல்களில் கருப் பொருளாகக் களவு மணம், பிரிவு, இரங்கல், உணர்ச்சி வெளிப்பாடு, கோபம், மகிழ்ச்சி என்று இன்னோரன்ன பெண்ணின் உணர்வுகள் காணப்படுகின்றன. ஆண்புலவர்கள் சொல்லும் பிரிவுத் துயரினைவிட பெண்பால் புலவர்களின் பிரிவு உணர்ச்சி வெளிப் பாடனது வீரியமிக்க சொல்லாடலைக் கொண்டுள்ளது.

**ஔவையாரின் பெண் புனைவு**

ஒரு பெண் தனக்கு விருப்பமான துணைத் தேர்வினைச் செய்துகொள்ள இடமளித்த காலமாக சங்ககாலம் திகழுகின்றது. இதன் அடிப்படையிலிலேயே சங்க அகப்பாடல்களில் களவு நிகழ்வினை எடுத்துக்கூறும் பாடல்கள் அமைந்துள்ளன. எனினும் இம்மணங்களில் பெற்றோரின் தலையீடு என்பது பெண் சார்ந்தே அமைவதையும், அதுவும் பெண்ணாலே நிகழ்த்தப்படுதலையும் அறியமுடிகின்றது. இங்கு ஆண் யாரையும் மணந்துகொள்ள உரிமையுள்ளவன் என்றும், பெண் சுயமாக முடிவு செய்ய சுதந்திரம் அற்றவள் என்பதற்கும் "அறத்தொடு நிற்றல்" பாடல்களே சான்றுகளாக அமைகின்றன.

ஒரு பெண் தான் விரும்பியவனை மணம் செய்ய உடன்போக்கினை நிகழ்த்த வேண்டிய சூழல் ஏற்படுவதனையும், அங்கும் தலைவனின் தகுதி நோக்கியே அறத்தொடு நிற்றல் செய்வதனையும்,

**"பறைபட பணிலம் ஆர்ப்ப இறை கொள்பு**

**தொல் மூதாலத்துப் பொதியில் தோன்றிய**

**நால் ஊர்க் கோசர் நல்மொழி போல,**

**வாயாகின்று**..............................

**தொகுவளை முன்கை மடந்தை**
**நட்பே"** (குறுந்தொகை, பா.15)

என்ற குறுந்தொகைப் பாடல், தொல் காப்பியம் குறிப்பிடும்

**கொடுப்போரின்றியும் கரணம் உண்டே, புணர்ந்துடன் போகிய காலையான** (தொல்காப்பியம், கற்பியல், நூ.141) என்ற

நூற்பா குறிப்பிடுவது போன்று உடன்போக்கில் இருவரும் மணம் செய்து கொண்டமையை வெளிப்படுத்தும். "நட்பு, வாயாகின்று" என்ற சொற்கள் இதனை உணர்த்தி நிற்கின்றன. தலைவி, தன் சுற்றத்தாரைப் பிரிந்து தலைவனுடன் உடன்போக்கில் சென்றாள். கலைவியின் கற்புநெறிப்பட்ட செயலைத் தன்தாயிடம் கூறி அறத்தோடு நிற்கின்றாள் தோழி. இங்கு பெண்ணின் மனவுணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் தலைவனின் பண்புகளை கோசர்களின் பண்புகளோடு ஒத்திட்டுப் பார்ப்பதை ஔவையின் மொழிகள் எடுத்தியம்புகின்றன.

ஒரு ஆண் தன் மிகுக்காதலை எப்படித் தன்னைச் சார்ந்தோரிடம் உணர்ச்சி மேலிட்டு விளம்புவானோ, அதைப்போன்றே பெண்ணின் உணர்ச்சிகளையும் அவள் வெளிப்படுத்துவதை ஔவையாரின் பாடல்களில் அறியமுடிகின்றது. பெண்ணிற்குரிய இலக்கணமாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்றவற்றால் தன் காதலை வெளியில் சொல்வது இயல்பன்று என்று வரையறையை மீறி, பெண்ணின் உணர்ச்சியும் வெளிப்படுத்தல் என்பது சமூக நியதி என்பதும், அதற்கு பெண்ணுக்கு உரிமையும், வலிமையும் உண்டு என்பதையும்,

**முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**

**ஒரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**

**ஆஅ! ஒல்" எனக் கூவுவேன் கொல்?**

**அலமரல் அசைவளி அலைப்ப என்**

**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே**

(குறுந்தொகை, பா.28)

இவ்வரிகள் வெளிப்படுத்துகின்றன. இங்கு மூளச் செய்தல் மனத்தின் செயலாகவும், தாக்குதல் உடம்பின் செயலாகவும் கூறி மனம், மெய், மொழி என்ற மூன்றினாலும் தான்கொண்ட உணர்வினை வெளிப்படுத்தும் முயற்சிகளைத் தலைவி செய்வதாக இப்பாடல் விளக்கி நிற்கின்றது.

தலைவன் தன்னைவிட பொருளையே விரும்புகின்ற செயலைச் செய்கின்றான் என்பதையும் தன்பாடல் வழி உணர்த்தியிருக்கின்றார் ஔவையார். ஒரு ஆண் தன்னுடைய சமூக மதிப்புக்களை முன்னிருத்தித் தன்னைச் சார்ந்து ஒழுகுகின்ற பெண்ணைப் புறந்தள்ளிப் போகின்ற காட்சியையும், தன்னைப் புணர்ந்த பின் செல்வது, தன்னுடைய உடல் மெலிவுக்குக் காரணமாகின்றது என்பதையும் ஔவையின் தலைவி உரைக்கின்ற திறத்தினை,

**வெந்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென**

**நெற்று வினை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**

**மலையுடை அருஞ்சுரம் என்ப நம்**

**முலையிடை முனிநர் சென்ற ஆறே**

(குறுந்தொகை, பா.39)

என்று தன்னைப் புணர்ந்து செல்லல் தலைவனின் தகுதி அன்று என்கிறாள்.

அகப்பாடல்களில் சொல்லப்படும் தலைவியின் நிலையானது அன்றைய வாழ்வியலோடு இணைந்து காணப்படும் பெண்களின் வலிகளை முன்வைத்துப் புனையப்பட்ட சொல்லோவியமாகும். ஒரு நாடும் இயல்பு மிக்கவனாய்க் காணப்படுகின்றான். பெண் அங் ஆண் தான் காதலித்து மணந்து கொண்டானாயினும் பரத்தையரை ஒரு பிள்ளை பெற்றுத்தரும் கருவியாக மட்டுமே காணப்படுகின்றாள். தலைவி தன் மன வேதனையை அல்லது எண்ணத்தை எவ்வளவு வலிமையோடு முன்வைக்கின்றாளோ அதனைவிட மேலோங்கியதாக வெளிப்படும் ஆளுமைமிக்க சொல்லாட்சியே தலைவியின் பரத்தையர் கூற்றுக்கள் காணப்படுகின்றன. பரத்தை கூற்றுக்களில் வேதனைமிகுந்த சூழலை முன்வைப்பதை,

**கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி**

**பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி....**

**நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி**

**முனை ஆன் பெருநிலை போல**

**கிளையொடு காக்க தன் கொழுநன் மார்பே**

(குறுந்தொகை, பா.80)

என்ற பாடல் உணர்த்துகின்றது. பரத்தையரின்பால் சென்று மீண்டுவரும் தலைவனின் நடத்தையும் நிலைத்த தன்மையுடையது அல்ல. அவன் சில நாள் தங்கிப் பின் பிற பரத்தையரைத் தேடிப்புகுவானே அல்லாது ஒழுக்கமுடையவன் அல்லன் என்பதையும் ஔவையாரின் பாடல்கள் முன்வைக்கின்றன. இத்தகைய ஒழுக்கமில்லாதவன் உறவு சில

நாட்களே இருக்கும் என்பதை,

**அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற விளை கனி**

**குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்**

**கொன்முனை இரவுஊர் போலச்**

**சில ஆகுக நீ துஞ்சும் நாளே!**

(குறுந்தொகை, பா.91)

என்னும் வரிகள் வழி அறியலாம்.

தலைவன் பரத்தையிடம் செல்லுதல் அன்றைய காலகட்டங்களில் இயல்பாக நடந்தேரினமையைப் பரத்தையர் கூற்றுப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. தலைவனிடம் தலைவிக்கு இருக்கும் உரிமையினை விடவும் பரத்தையர்க்கு உரிமை இருந்ததையும் குறுந்தொகைப் பாடல்கள் விளக்கி நிற்கின்றன. மேலும், பரத்தையிடம் தன்னுடைய வீட்டிலேயே மனைவிக்கு சரிநிகராக வைத்திருந்த தன்மையினையும், வீட்டில் இருக்கும் பரத்தையை விட்டு தலைவன் பிற பரத்தையரைப் புணருகின்ற தன்மையினையும் ஔவையார் பாடல்கள் வழி அறியலாம். இங்கு இற்பரத்தை, சேரிப் பரத்தையோடு சூள் உரைக்கும் தன்மையினையும் இவர் பாடல்களில் காண முடிகின்றது.

**அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்**

**வணங்குஇறைப் பணைத்தோள் எள்வளை மகளிர்**

**துணங்கை நாளும் வந்தன. அவ்வரைக்**

**கண்பொர மற்று அதன்கண் அவர்**

**மணம் கொளற்கு இருவருமே மள்ளர் போரே**

(குறுந்தொகை, 364)

என்ற பாடலில் சேரிப்பரத்தை தன்னைப் புறங்கூறினாள் என்று அறிந்த காமக்கிழத்தி அவளொடு வெகுண்டு தனக்கும் தலைவனுக்கும் உள்ள பிணைப்பினையும், உறவினையும் உணருமாறு சூளுரைப்பதாக இப்பாடல் அமைகின்றது. "இங்கு இற்கிழத்தி பேல தலைவனுக்கு உரிமை பூண்டு இல்வாழ்க்கை நிகழ்த்தும் பெருமிதத்தால் காமகிழத்தி பரத்தையை இகழ்ந்தனள். அவளொடு எவ்வாற்றானும் பொருந்தாத ன்னை ஒப்பக் கருதிக்கூறும் காதற்பரத்தை மீது சினம் கொண்டனள்." (குறுந்தொகை மூலமும் உரையும், ப.384) என்று இப்பாடலுக்கு விளக்கம் கூறுகின்றார் முனைவர் வி. நாகராசன்.

பரத்தை கூற்றாக வரும் பாடல்கள் வழி தலைவன் (ஆண்) விருப்பம் போன்று நடக்கும் தன்மையினை உடையவனாக இருக்கின்றான். பெண் என்பவள் இங்கு நுகர்வுப் பொருளாகவே சித்திரிக்கப் படுகின்றாள். தலைவி என்பவள் சமூக அந்தஸ்தின் பொருட்டாகவோ அல்லது சந்ததிகளின் அடையாளப் படுத்துதலின் பொருட்டாகவோ அமைந்திருக்கின்றாள் என்றே கொள்ளவேண்டும்.

## முடிவுரை

குறுந்தொகையில் ஔவையார் பாடிய 15 பாடல்களில் தன்னிலை கூறுதல் அல்லது தன் மன உணர்ச்சியினை வெளிப்படுத்தல் என்ற தன்மையிலும், ஆணைப்போன்றே பெண் என்பவள் உள்ள, உடல் உணர்வினை உடையவள் என்ற நிலையிலும் பாடப்பட்ட பாடல்கள் மூன்று பாடல்கள் மட்டுமே. மூன்று பாடல்கள் பரத்தை கூற்றுப் பாடல் களாகவும், பிற பாடல்கள் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரினை எடுத்தோது வதுமாக அமைந்துள்ளன. வலிமையான சமூக அங்கீகாரம் உடைய ஔவையாரே பெண் உரிமைகளை மானிட உரிமைகளாக இணைத்துச் சொல்ல விளைவதனை அறியமுடிகின்றது.

## பார்வை நூற்கள்


- வி. நாகராசன் (உரையாசிரியர்), குறுந்தொகை மூலமும் உரையும், 2004, நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
- தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, 1989, கழக வெளியீடு, திருவல்லிக்கேணி, சென்னை.
- வ.சுப. மாணிக்கம், தமிழ் காதல், 2012, நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.